**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 28–ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **சண்முகம்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**28.07.2025 OS.No. 66/2021 வா.சா. 1 சண்முகம் ஆஜர்**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 60 சென்ட் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . எனது தகப்பனார் பெயர் கவுண்டன் தண்டிதேவர் ஆகும் . எனது தகப்பனாரோடு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது தகப்பனார் ஓரே வாரிசு ஆவார். எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் பெண்மக்கள் –3 ஆண்மக்கள்–6 பேர் ஆவோம். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை நாங்கள் ஆண்மக்கள் வாய்கிராலாக பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த வாய்கிரால் பாகத்தில் புல எண் .321/4 ஒரு ஏக்கர் 20 சென்டை எனது சகோதரர் 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு ஒதுக்கப்பட்டு 1ம் பிரதிவாதி மேற்படி அவரது பாகத்தை 04.06.2008ம் தேதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுதத விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது . மேற்டிப 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரையப் பத்திரத்தில் நான் 3வது சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். அவர் எந்த சொத்தை விற்றார்கள் என்று எனக்கு தெரியாது. சர்வே எண் .321/4 ஆனது கூட்டுபபட்டாவாக இருப்பதால் கூட்டுப்பட்டாதாரர்கள் அனைவரும சாட்சி கையொப்பம் இட்டால் தான் 3ம் பிரதிவாதி கிரையம் வாங்குவேன் என்று சொல்லியதன் அடிப்படையில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல . தாவா சொத்து கூட்டுப்பட்டாவாக இருப்பதால் தான் பட்டா மாற்றி தர 3ம் பிரதிவாதி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்த போது கூட்டுப்பட்டாதாரர்கள் அனைவரும் சம்மத வாக்குமூலம் கொடுத்தால் தான் பட்டா மாற்ற முடியும் என்று சொல்லிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல . கடந்த 08.02.2014ம் தேதி எனது உடன்பிறந்த சகோதரர்கள் தண்டிஸ்வரன் , சிவன்ராஜ், ஜெயமணி, சண்முகம் மற்றும் நான் உட்பட அனைவரும் கொடுத்த சம்மத வாக்குமுலத்தின் அடிப்படையில் தான் இந்த 3ம் பிரதிவாதிக்கு பட்டா மாறியது என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்மத வாக்குமுலம் கொடுத்துவிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . புல எண்.321/4ல் எனக்கு

பாத்தியப்பட்ட 60 சென்டிற்கு பதிலாக புல எண் .309/3,309/4 ல் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 60 சென்டை பொருத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல . புல எண்.309/3,309/4–ல் எனக்கு ஒதுக்கப்பட்ட 60 சென்டை சேர்த்து மொத்தம் ஒரு ஏக்கர் 44 சென்ட் எனது பாகத்திற்கு கிடைத்த சொத்தை 01.07.2003 ம் தேதி எனது மனைவிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல . எனது மனைவிக்கு எழுதி கொடுதத செட்டில்மெண்ட் சொத்தை பொருத்து சமூகம் நீதிமன்றத் தில் அசல் வழக்கு எண்.110/2019 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கும் கடந்த 08.07.2025 ம் தேதி சொத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதால் சமூகம் நீதிமன்றத்தில் இருந்து சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான் . தாவா சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் தாவா சொத்தை பொருத்து கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . நாங்கள் வாய்கிராலாக பாகம் பிரித்து கொண்ட நிலையில் தாவா சொத்தை பொருத்து நான் 1ம் பிரதிவாதியான கிருஷ்ணமூர்த்தி பெயரில் மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலு , இதர உடன்பிறந்தவர்கள் பேரில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாவா சொத்து எனக்கும் 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி , ஜெயமணி ஆகியோருக்கு மட்டுமே வாய்கிரால் பாகத்தில் பாகம் பிரிக்கப்பட்டது . மேற்படி தாவா சொத்தில் எங்கள் மூவருக்கும் எவ்வளவு விஸ்தீரணம் பாகம் என்றால் தலா 60 சென்ட் பாகம் ஆகும். அதில் மீதி 45 சென்ட் உள்ளது. தாவா சொத்தில் ஒரு ஏக்கர் 20 சென்டை கிரையம் கொடுத்தது போக ஜெயமணிக்கு பாத்தியப்பட்ட 60 சென்டும் மீதி சொத்துக்களும் பூமியில் உள்ளது என்றால் சரிதான். தாவா புல எண்.321/4–ல் எனது சகோதரரான 1ம் பிரதிவாதிக்கு எனக்கு கிடைத்த 60 சென்டை ஒதுக்கிவிட்டு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட புல எண்.309/3,309/4 60 சென்டை எனக்கு ஒதுக்கிவிட்டார்கள் என்றாலும் , புல எண்.309/3,309/4–ஐ பொருத்து வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் தான் அதில் எனக்கு பாகம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற எண்ணத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா மொத்த சொத்தின் சர்வே எண் .321/4 ஆகும். புல எண்.321/4 SLR காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் எனது தகப்பனார் கவுண்டன் தண்டி தேவர் பெயரில் இருந்தது . மேற்படி SLR Record–ஐ நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை . எனது ஐயாவின் பெயர் அய்யம்பெருமாள் தேவர் ஆகும் . அவருடைய வாரிசுகள் யார் யார் என்றால் கவுண்டன் தண்டிதேவர் –1, இருளாயி–2, பொன்னுப்பிள்ளை–3 ராசம்மாள்–4 ஆகியோர் ஆவார்கள் . எனது அப்பத்தாவின் பெயர் இருளாயி ஆகும் . எனது ஐயாவிற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அவர்கள் முறையே பேச்சியம்மாள் இருளாயி என்றால் சரிதான் . தாவா சொத்து எனது தகப்பனாருக்கு தாய் வழி சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . தாவா சொத்தின் மொத்த

விஸ்தீரணம் 2 ஏக்கர் 29 சென்ட் ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் யார் யாருக்கு பாகம் உடையது என்றால் எனக்கும் , 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி, ஜெயமணி ஆகியோருக்கு பாகமுடையதாகும். தாவா சொத்தில் எவ்வளவு பாகம் ஒவ்வொருவரும் பிரித்து கொண்டோம் என்றால் தலா 60 சென்ட் ஆகும். தாவா சொத்தில் மேல்புறம் 60 சென்ட் ஜெயமணிக்கும், கீழ்புறம் 60 சென்ட் 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கும், எனக்கு கிருஷ்ணமூர்த்திக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு வடபுறம் 60 சென்ட்டும் ஒதுக்கப்பட்டது. தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 29 சென்ட் தற்போது யார் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி விஸ்தீரணம் நீங்கலாக மீதி விஸ்தீரணத்திற்கு அய்யாச்சாமி , சண்முகம், ஜெயமணி , ஜெயப்பிரகாஷ் ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது . அதில் மேற்படி அய்யாச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான் . அவர் எப்போது இறந்தார் என்றால் இறப்பு சான்றிதழை பார்த்தால் தான் தெரியும். புல எண்.321/4 தற்போது என்னென்ன உட்பிரிவுகளாக போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் உட்பிரிவு எனக்கு நினைவில்லை . பட்டா எண்.1800 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணமும் மேற்படி பட்டா எண் .1800 ல் தான் உள்ளது என்றால் சரிதான் . தற்போது தாவா சொத்தின் புல எண் .321/4A, புல எண்.321/4B, புல எண்.321/4C என உட்பிரிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் ஜெயமணியின் பங்கை அவரது மகன் சுதாகருக்கு எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரிதான் . இந்த நம்பர் 4,5 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்க வேண்டுமாய் கொடுத்த மனுவில் நான் எதிர்உரை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவர்களை தரப்பினராக சேர்த்ததில் எனக்கு ஆட்சேபனை இல்லை . 5ம் பிரதிவாதி ராசுத்தேவர் எனக்கு பங்காளி முறை என்றால் அவர் எனது உடன்பிறந்த சகோதரர் அல்ல. அடுத்த பங்காளி ஆவார். 5ம் பிரதிவாதி ராசுத்தேவரின் தகப்பனார் பெயர் அம்பலந்தண்டி தேவர் ஆகும் . அம்பலந்தண்டி தேவரின் தகப்பனார் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது . அம்பலந்தண்டி தேவரும் என்னுடைய பாட்டனார் கவுண்டன்தண்டி தேவரும் சின்னம்மா பெரியம்மா மக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . தாவா புல எண்ணில் நானும் எனது சகோதரர்களான 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜெயமணி ஆகியோர் பிரித்து கொண்ட தலா 60 சென்டு(180 சென்ட்) நீங்கலாக மீதம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 48 சென்ட் உள்ளது. அந்த 48 சென்டிற்கான தற்போததைய உட்பிரிவு சர்வே எண் என்ன என்றால் தற்போதைய உட்பிரிவு எண் சரியாக தெரியாது. மீதம் உள்ள 48 சென்டில் நான் கடந்த ஆண்டு (1434 பசலிக்கு) விவசாயம் எதுவும் செய்து வந்தேனா என்றால் நான் விவசாயம் செய்யவில்லை . மிச்ச இடத்தை யாருக்கு குத்தகை விட்டு வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது . எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் கால SLR ல் தாவா புல எண்.321/4 க்கு அ.தண்டித்தேவர் அ.கவுண்டன் தண்டித்தேவர் ஆகியோர் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும்

ஆவணம் SLR ஆவணமும் இல்லை , UDR ஆவணமும் இல்லை . அ.தண்டித்தேவருக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி எனது ஐயாவின் மனைவிகளான பேச்சியம்மாள் இருளாயி ஆகியோரோடு உடன்பிறந்தவர்கள் சுப்பம்மாள் மற்றும் முத்திருளி என்றால் சரிதான். தாவா சொத்தில் மேற்படி 4 பெண்களுக்கும் பாத்தியமுடையது என்றாலும், எனது ஐயா அய்யம்பெருமாள் தேவர் 2 பெண்களை திருமணம் செய்து கொண்டதன் அடிப்படையிலும் சுப்பம்மாள் பாகத்தை வாய்மொழியாக கிரையம் வாங்கியதன் அடிப்படையிலும , தாவா சொத்தில் 4ல் 3 பங்கு எனது ஐயாவிற்கு பாத்தியப்பட்டதாக இருந்து எனது தகப்பனாருக்கு கிடைத்தது என்றாலும் மீதம் ஒரு பங்கு முத்திருளிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. முத்திருளியின் மகன் பெயர் தான் அம்பலந்தண்டி தேவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்திருளியின் மகன் அம்பலந்தண்டி தேவர் என்பதால் தான் SLR ஆவணத்தில் அம்பலந்தண்டி தேவர் என்பதை தான் அ.தண்டித் தேவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . அம்பலந்தண்டித் தேவருடன் உடன்பிறந்தவர் தான் 5ம் பிரதிவாதி ராசுத்தேவர் என்றால் சரிதான் . அம்பலந்தண்டித் தேவருடன் உடன்பிறந்த சகோதரி தான் அய்யம்மாள் என்றால் இருக்கலாம். அய்யம்மாளின் மகன் தான் 4ம் பிரதிவாதி வீரபத்திரன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதிக்கு பஞ்சவர்ணம் என்பவரை திருமணம் செய்துள்ளார்கள் என்றால் திருமணம் செய்திருப்பார்கள் . தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்திற்கு அடங்கல் எதாவது வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியிருக்கிறேன். தாவா சொத்திற்கான அடங்கலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . தாவா மொத்த சொத்தின் வடபுறத்தில் மேல்புறம் 48 சென்ட் வீரபத்திரன் பெயரில் நெல் பயிரிட்டு அவரது பெயரில் அடங்கல் வாங்கியுள்ளார் என்றால் உழவடை வாங்கியிருப்பார் . சென்றாண்டு உழவடை 4ம் பிரதிவாதி வீரபத்திரன் தான் செய்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 48 சென்ட் 4ம் பிரதிவாதி வீரபத்திரனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் , நான் பொய்யாக மொத்த சொத்தும எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல . கிருஷ்ணமூர்த்தி கணேசனுக்கு தாவா சொத்தை பொருத்து கொடுத்த கிரையப் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான் . 48 சென்ட் எனக்கு பாத்தியப்பட்டது என பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**(3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam